கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (20.10.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண் : 739/2016 நாள்: 20.10.2016

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (20.10.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (20.10.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 18.10.2016 அன்று பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 14.20 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 12.50 அடியும், சிற்றார்-1 அணையின் நீர்மட்ட இருப்பு 6.07 அடியும், சிற்றார்-2 அணையின் நீர்மட்ட இருப்பு 6.17 அடியும், பொய்கை அணையின் நீர்மட்ட இருப்பு 10.90 அடியும், மாம்பழத்துறையாறு நீர் மட்ட இருப்பு 44.29 அடியும் உள்ளது.

17.10.2016 அன்று வரை வேளாண் விரிவாக்க மையம் மூலம் 21655 (மெ.டன்) பரப்பில் நெல் பயிறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 17.10.2016 முடிய 14,860 நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 11,457 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகளும், 559 குட்டை நெட்டை ரக தென்னங்கன்றுகளும் ஆக மொத்தம் 26,876 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 561 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 3,169 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 534 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 4,264 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

அடைக்காகுழி பஞ்சாயத்துக்குட்பட்ட குளப்புரம் ஊரில் உள்ள ஐயங்குளம் என்ற குறட்டுர் குளத்தில் மடையை சரி செய்வதற்கு ரூ.5 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டில் நிதி ஆதாரத்தைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் மடையை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், புதுக்குளம் அருகில் பன்றி வாய்க்காலில் இருந்த தடுப்பணை உடைந்து விட்டதால், வரும் நிதியாண்டில் தடுப்பணை சீரமைக்க நிதி ஆதாரத்தை பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், குன்னத்தூர் கிராமத்தில் உள்ள தாமரைகுளம் சீரமைக்க நீர்வள, நிலவள திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசிடமிருந்து சிறப்பு நிதிகள் பெறப்படும்போது முன்னுரிமை அளித்து பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், சுசீந்திரம் குளத்திற்கு தண்ணீர் வரும் கால்வாய் நீர் அடைப்பு காலமாகிய மார்ச் முதல் மே வரையுள்ள காலங்களில் சரி செய்யப்படும் எனவும், ஆற்றூர் கிராமம் புல எண் 322 அளவு செய்து ஆக்கிரமிப்பை கண்டறிய கல்குளம் வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி இடம் அளந்து எல்கை நிர்ணயம் செய்த உடன் ஆக்கிரமிப்பு இருப்பின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், பட்டணங்கால் பிரதான கால்வாய் சாமியார்மடம் அருகில் கால்வாயில் மண் சரிந்துள்ளது. மண் சரிவு சரி செய்தவுடன் கீழ்குளம், பைங்குளம் பகுதிகளில் உள்ள கால்வாய்களுக்கு சுழற்சி முறையில் நீர் விநியோகம் செய்யப்படும் எனவும், புத்தேரி பெரியகுளத்தின் மறுகால் பாயும் இடத்திலுள்ள மரங்கள் மற்றும் பறக்கை வருவாய் கிராமத்திற்குட்பட்ட ஆலங்கால் கால்வாயிலுள்ள மரங்கள் அடையாளம் இடப்பட்டு இத்துறை கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே வரும் நிதியாண்டில் குத்தகை ஏலமிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பால்குளம் தூர்வாரி

சுத்தம் செய்ய தற்பொழுது குளத்தில் முழு கொள்ளளவில் தண்ணீர் இருப்பதால் நீர் அடைப்பு காலமாகிய மார்ச் முதல் மே வரையுள்ள காலங்களில் துறையின் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், நெய்யாறு இடதுகரை முல்லையாறு கிளைக்கால்வாய் மாலைக்கோடு முதல் வன்னியூர் வரை கால்வாயை வரும் நிதி ஆண்டில் நிதி ஆதாரத்தைப் பொறுத்தவாறு தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளபடும் எனவும், முல்லையாற்றில் மாலைக்கோடு பகுதியில் பழுதடைந்த ஷட்டர் சரிசெய்ய வரும் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், பூதப்பாண்டி பேரூராட்சி பகுதிக்குட்பட்ட கழிவுநீர் ஓடையிலிருந்து வரும் கழிவுநீர் ஆற்றில் கலக்காமல் தடுக்க உறிஞ்சுகுழி அமைக்க சுமார் 7 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் மன்றக்கூட்டத்தில் பொருள் சேர்த்து உறிஞ்சுகுழி கிணறு அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், புத்தளம் பேரூராட்சிக்குட்பட்ட அரியபெரமாள் காலனியில் வடக்கு புறத்தில் தென்னந்தோப்பு வயல்களுக்கு செல்ல ஏதுவாக ஏற்படுத்தப்பட்ட 2 கி.மீ மண்சாலையினை சிமெண்ட் சாலையாக மாற்றுவதற்கு சுமார் ரூ.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். தற்பொழுது இப்பேரூராட்சியில் போதிய நிதிவசதி இல்லை. எதிர்வரும் அரசின் திட்ட நிதியில் இப்பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, வேளாண்மை இணை இயக்குநர் திரு. நா.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், வட்டாட்சியர்கள், செயல் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.